# வேலூர் கோட்டை கட்டமைப்பு

42

முனைவர் சு. தீபா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அக்சிலியம் கல்லூரி, காந்திநகர், காட்பாடி, வேலூர் - 632006.
deepa.thiru7819@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பழங்கால நகரங்களில் ஒன்றாகக் கருதப்படும் வேலூர் மாநகரம், சுதந்திர வரலாற்றில் தனி ஆவணம். இம் மாநகரம், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், பல்வேறு தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதிகள், இயற்கை எழில் கொஞ்சும் மலைப் பிரதேசங்கள், கண்கவர் சுற்றுலாத் தலங்கள், பக்திப் பரவசமூட்டும் ஆன்மீகத் திருக்கோயில்கள் ஆகியன சூழ்ந்திருக்கக் காணமுடிகிறது. மாநகரின் மையப்பகுதியில் அமைக்கப் பட்டிருக்கும் கோட்டை, வேலூரின் தனிப் பெருமை. இந்தக் கோட்டையின் கட்டமைப்பு இரண்டடுக்குப் பாதுகாப்பு பெற்றிருக்கிறது. கோட்டை மதில்கள், உறுதியான கட்டமைவு, சிறைச்சாலை, தர்பார் மண்டபங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை இக்கட்டுரை முன்னிறுத்துகிறது.

**திறவுச் சொற்கள்**

வேலூர் வரலாறு - கோட்டை வரலாறு - தோற்றப் பொலிவு - அகழி அமைப்பு - கல்துளை அமைப்பு - சிறையமைப்பு.

**முன்னுரை**

இந்தியாவின் தென்பகுதி மாநிலமான தமிழ்நாட்டைச் சேர்ந்த மாநகரங்களில் வேலூரும் ஒன்று. வேலூர் மாவட்டத்தின் தலைநகரமான வேலூர், பாலாற்றங் கரையில் அமைந்துள்ளது. இடைக்காலச் சோழர்கள், பிற்காலச் சோழர்கள், விஜயநகரப் பேரரசர்கள், ராட்டிரக் கூடர்கள், பல்லவர்கள், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் என ஆட்சியாளர்கள் பலரைக் கண்ட இந்த வேலூர் மாநகரின் மிகப்பெரிய வரலாற்று அடையாளம் அந்நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள கோட்டையாகும். வேலூர் கோட்டை பிரம்மாண்டத்தின் அடையாளமாகும். இதன் கட்டமைப்பு மற்றும் நிகழ்வுகள் குறித்து இங்கு எடுத்தோதப்படுகிறது.

**வேலூர் வரலாறு**

தமிழ் இலக்கிய வரலாற்றில், வேலூர் பற்றிய வரலாறு ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்து தான் தொடங்குகிறது. இதனை, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் உள்ள சோழர் காலக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் பதிவுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. முதலில் சோழர்கள் வசமிருந்த வேலூர், பின்பு விஜயநகரப் பேரரசர்கள் கரங்களுக்கு மாறுகிறது. மருத்துவப் புரட்சி, கல்விப் புரட்சி எனத் தொடர் புரட்சிகளைத் தாங்கி நிற்கும் வேலூரில் தான், சுதந்திரப் போருக்கான முதல் புரட்சி விளைந்தது என்பது தனிப்பெருமை. அந்தப் பெருமை வேலூர் கோட்டையில் அரங்கேறியதாக வரலாறு சொல்லப்படுகிறது.

**கோட்டை வரலாறு**

கிபி. பதினாறாம் நூற்றாண்டில், விஜயநகரப் பேரரசால் வேலூர் கோட்டை முதன் முதலில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பின்னர் பீஜப்பூர் சுல்தானியம் மற்றும் மராட்டியர்களால் இந்த கோட்டை விரிவு படுத்தப்பட்டதாகவும் கருதப்படுகிறது. அவர்களால் பலப்படுத்தப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதன் பின்னர் 1678- ஆம் ஆண்டில் மைசூர் அரசால் கைப்பற்றப்பட்டது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு முழுவதுமாக அவர்கள் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அதன் பின்னர் ஆங்கிலேய அரசாங்கத்தில் வேலூர் கோட்டை ராணுவ முகாம்களாகவும், சிறைச்சாலையாகவும் செயல்பட்டது. பல புரட்சியாளர்களின், போராட்ட வீரர்களின் வரலாறுகளைத் தாங்கியபடி இன்று வரை வேலூர் கோட்டை நிலைத்து நிற்கிறது. [1]

**கோட்டையின் தோற்றப்பொலிவு**

வேலூர் கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் சுற்றுச்சுவர் கலைநயம் மிக்கது. நெடியதான மதில்சுவர் பாதுகாப்பின் உறுதித் தன்மைக்கு அடையாளமாகிறது. கோட்டையின் வடப்புறச் சுவற்றின் உள்வாயில் படிக்கட்டுகளைக் கட்டி, அகழி நீர் வரை பயணிப்பதற்கு ஏதுவாக அமைத்திருக்கக் காண முடிகிறது. இந்தக் கோட்டை ஒரு குன்றின் மீது அமைக்கப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக் கருத்தில் உறுதியில்லை. ஆற்காடு, இராணிப்பேட்டை முதலான பகுதிகளிலிருந்து கற்கள் கொண்டுவந்து கோட்டை கட்டப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. வேலூர் கோட்டையானது, மேல் கோட்டை, கீழ்க்கோட்டையென இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மேல் கோட்டையானது ஆட்சியாளர்களுக்கு உரியதாகப் பயன்படுத்தப்பட்டது. இதற்கு ஏதுவாக மிகப்பெரிய அரண்மனை அமைக்கப்பட்டிருக்கக் காணலாம்.

இக்கோட்டையில், உயரமான தூண்கள், நுணுக்கமான வேலைப்பாடுகள் மற்றும் பசுமையான தோட்டங்கள் இருக்கின்றன. இக்கோட்டை, இந்து - சராசெனிக் கட்டிடக்கலைக்கு ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. அரண்மனை தர்பார் மண்டபமும் உள்ளது. அங்கு ஆட்சியாளர்கள் தங்கள் நீதிமன்றங்களை வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. மேல்கோட்டையில் ஒரு மசூதியும் கட்டப்பட்டிருக்கிறது. மேல்கோட்டையின் மறுபுறம் இருக்கும் கீழ்க்கோட்டை, ராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதில் ஒரு தேவாலயம், ஒரு மருத்துவமனை, ஆயுதக் களஞ்சியம் உட்பட பல கட்டிடங்களைக் கொண்டிருக்கக் காண முடிகிறது.[2] கோட்டைக்குள், திப்பு மஹால், ஹைதர் மஹால், பேகம் மஹால், கண்டி மஹால், பாதுஷா மஹால் என ஐந்து சிறிய அரண்மனைகள் அமைக்கப் பட்டிருக்கக் காணலாம். [3]

**அகழி அமைப்பு**

கோட்டையைச் சுற்றி அகழி அமைத்திருக்க காண முடிகிறது. உயர்ந்த மதில்களைக் கொண்ட கோட்டையை , 19 அடி அகலமும், 29 அடி ஆழமும் கொண்ட அகழி சுற்றி வளைத்திருக்கிறது. ஒரு காலத்தில் பகைவர்களைத் தடுக்கவும் கோட்டையின் பாதுகாப்பிற்காகவும் ஏறக்குறைய

பாத்தாயிரம் முதலைகள் இந்த அகழியில் விடப்பட்டதாகவும் ஒரு வரலாறு சொல்லப்படுகிறது. இது ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள சூரியக்குண்டா தொட்டியில் இருந்து தண்ணீரை பெறுவதாகவும் கூறப்படுகிறது. கோட்டையின் மூன்று புறங்கள் அகழியால் சூழ்ந்திருக்க தெற்கு பகுதி மட்டும் வறண்டு இருக்க காண முடிகிறது. அதிகத் தற்காப்பு நோக்கங்களுக்காகக் கட்டப்பட்ட இந்த அகழியின் சுற்றளவு சுமார் 8000 அடி நீளமும் 190 அடி அகலமும் 20 அடி ஆழமும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது. மழைக்காலங்களில் பெருகும் உபரி நீர், வீணாகாமல் பாலாற்றில் கலப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. [4]

**கல் துளை அமைப்பு**

கோட்டை மதில் சுவற்றின் மேல் வரிசையில், அரைவட்ட வடிவிலான கற்கள் நிர்ணயிக்கப்பட்ட இடைவெளிகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரைவட்ட கல்லின் அடிப்பகுதியிலும் போர் கருவிகளை எறிவதற்கும், துப்பாக்கியினால் சுடுவதற்கும் பயன்படுமாறு, நடுவே ஒரு துளை நேராகவும் பக்கவாட்டை நோக்கியும் அமைக்கப்பட்டிருக்க காணலாம். இந்த பொந்துகள் போன்ற சிறிய இடைவெளியின் வழியே அம்புகளை எறியலாம். துப்பாக்கியால் தோட்டாக்களைக் கொண்டு தாக்கலாம். உட்புறமாகச் சுவற்றை ஒட்டியுள்ள தாழ்ந்த நிலப்பகுதி, ஒன்பதரை மீட்டர் அகலத்தில் அமைக்கப்பட்டிருக்க காண முடிகிறது. இங்கு காவலர் தங்கும் வசதிகளுடன் அறைகள் உள்ளன. சுவர்களின் படிமேல் ஏறி, கோட்டையின் உட்பகுதியைச் சுற்றிவர முடியும். அதை ஒட்டிய மற்றொரு கனமான உட்சுவர் ஆறு மீட்டர் உயரத்தில் வெளிச்சுவரைப் போன்று அமைந்திருக்க காணலாம். [5]

**கட்டிடங்களின் அமைப்பு**

வேலூர் கோட்டையில் காணப்படும் பல்வேறு கட்டிடக்கலைப் பாணிகள், பல நூற்றாண்டுகளாக பல்வேறு ஆட்சியாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டாலும் அவை அனைத்தும் கோட்டையின் வளமான வரலாற்றை பிரதிபலிக்கின்றன. வேலூர் கோட்டை பதினாறாம் நூற்றாண்டில் விஜயநகர பேரரசால் கட்டப்பட்டது. காலப்போக்கில் மராட்டியர்கள், முகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் உண்டான தாக்கங்களை இக்கோட்டையின் உள்கட்டமைப்புகளில் காண முடிகிறது. வெவ்வேறு கட்டடக்கலைப்பாணிகள் இந்தக் கோட்டையில் பிரதிபலிக்கக் காணலாம். கோட்டைக்குள் இருக்கும் ஜலகண்டீஸ்வரர் கோயில் விஜயநகரப் பேரரசின் பாணியை தாங்கி இருக்கின்றது. சிக்கலான சிற்பங்கள், மண்டப அமைப்புகள் எல்லாம் தமிழர் பாணியைத் தாங்கியிருக்க காணலாம். கோட்டைக்குள் இருக்கும் புனித ஜான் தேவாலயம் ஐரோப்பியக் கட்டட பாணியில் கட்டப்பட்டிருக்கிறது. கோட்டைக்குள் இருக்கும் மசூதிகள் முகலாயர் கட்டிடக்கலை பாணியில் அமைந்திருக்கிறது. இதன் குவி மாடங்கள் மற்றும் வளைவுகள் முகலாயர் பாணியின் தனித்தன்மையால் வியப்படையச் செய்கிறது.

**சிறைச்சாலை அமைப்பு**

வியப்புகளின் குவியலாய் விளங்கும் வேலூர் கோட்டையில், தண்டனை கைதிகளுக்கென ஒரு சிறைச்சாலையும் அமைக்கப் பட்டிருக்கிறது. அது மிகவும் குறுகியதாக உள்ளது. பொதுவாக

மனிதர்களின் உயரம், சராசரியாக ஐந்திலிருந்து ஆறடி வரையாகத்தான் இருக்கும். ஆனால் இந்தச் சிறை மூன்றடி உயரம் வரை தான் அமைக்கப்பட்டிருக்கிறது. தண்டனை பெறுவோர் இந்தச் சிறையில் குறுகித்தான் வாழ வேண்டியிருக்கும். அத்தனை கடுமையான தண்டனை அந்த காலகட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. [6]

**முடிவுரை**

கட்டுக்கோப்பான கோட்டை, கடுங்காவல் கொண்ட மதில், எதிரிகளை நெருங்க விடாத அகழி எனத் தனித்தன்மைகளோடு திகழும் வேலூர் கோட்டை கற்களால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு களஞ்சியம்என்றால் அது மிகையில்லை. ஒரே ஒரு நுழைவாயிலைக் கொண்டு பிரம்மாண்டமாய் காட்சி அளிப்பது இக்கோட்டையின் தனி பெருமை. விஜய நகர மன்னர்கள், ஆற்காடு நவாபுகள், ஆங்கிலேயர்கள், பீஜப்பூர் சுல்தான்கள், மராட்டியர்கள் என ஆட்சியாளர்கள் பலரால் கட்டுப்படுத்தப்பட்டாலும் வரலாற்றில் இந்திய சுதந்திரத்தின் முதல் போராட்டம் மற்றும் புரட்சியை தாங்கியபடி நின்று கொண்டிருக்கிறது. இக்கோட்டை, தன்னை உலகுக்கு கட்டிக் கொடுத்துப் பாதுகாத்த சின்ன பூமி நாயக்கர் மற்றும் திம்மரெட்டி நாயக்கரின் பெருமையைப் பேசுகிறது. உலகத்தில் உள்ள கோட்டைகளின் கட்டமைப்பில் வேலூர் கோட்டை பேசும் படி இருந்தாலும் அதன் புகழ் வருங்காலத் தலைமுறையினரிடம் சரியாகச் சென்று சேர வேண்டும் என்பது தான் நம் அனைவரின் விருப்பமாகும்.

**உதவிய ஆதாரங்கள்**


1. vellore.nic.in
2. tamilnadutourism.com
3. தமிழகத்துக் கோயில் கலைகள் ஆய்வுக் கோவை ப.239, தமிழய்யா வெளியீட்டகம், ஔவைக் கோட்டம், திருவையாறு, பதிப்பு - ஜூலை 2006.
4. wordpress.com
5. தமிழகத்துக் கோயில் கலைகள் ஆய்வுக் கோவை ப.239, தமிழய்யா வெளியீட்டகம், ஔவைக் கோட்டம், திருவையாறு, பதிப்பு - ஜூலை 2006.
6. tamil.nativeplanet.com